**<u>DEPOSITION OF WITNESS</u>**

**<u>In the Court of Judicial Magistrate No.II, Mettur</u>**

**Case No : C.C. 144/2025**

**Prosecution witness : அ.சா. 1** **Date : 18.09.2025.**

| | |
|---|---|
| **Name : விஜயா** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**<u>முதல் விசாரணை</u>**

1) நான் நடுவநேரிபுதூரில் குடியிருந்து வருகிறேன். வீட்டில் தான் உள்ளேன். எனது கணவர் தறிஓட்டி வந்தார். 07.08.2024 ம் தேதி நானும்,எனது கணவரும் ஆயாமரம் பேருந்து நிறுத்தம் அருகே பட்டறை வைத்துள்ள எனது தம்பியை பார்த்துவிட்டு நாச்சம்பட்டியிலுள்ள எனது அம்மாவை பார்ப்பதற்காக எங்களுக்கு சொந்தமான TN 43 E 4630 TVS இருச்சக்கர வாகனத்தில் என்னுடைய கணவர் வண்டியை ஓட்ட நான் பின்னால் அமர்ந்து வந்தேன்.

2. மாலை 05.30 மணியளவில் ஜலகண்டாபுரத்திலிருந்து தாரமங்கலம் ரோட்டில் தாரமங்கலம் நோக்கி மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி ஆவின் பேக்கரி அருகே சென்றபோது எங்களுக்கு பின்னால் அதிவேகமாக 1240 பதிவெண் கொண்ட பல்சர் வண்டியை ஓட்டிவந்த எதிரி எங்கள் பின்னால் மோதி விபத்தை ஏற்படுத்தினார்.

3. நானும் எனது கணவரும் கீழேவிழுந்துவிட்டோம். மீண்டும் எதிரி எங்களுக்கு முன்னால் சென்ற TVS XL வண்டியின் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார். இந்த விபத்தில் எனக்கு வலது கை, இடுப்பு பலத்த அடிப்பட்டது. வலதுக்கையில் ஏற்பட்ட காயத்திற்கு அறுவை சிகிச்சை செய்துள்ளேன். எனது கணவருக்கு

பின்தலையிலும், வலதுகாலிலும் பலத்த அடிப்பட்டது. எங்களுக்கு முன்னால் சென்ற வண்டியின் மீது எதிரி ஓட்டிவந்த வண்டி மோதியதில் அவருக்கும் காயங்கள் ஏற்பட்டிருந்தது.

4. இந்த விபத்தில் அடிப்பட்ட எனது கணவர் மற்றும் என்னையும் விபத்தை ஏற்படுத்திய எதிரி அவருடன் பயணம் செய்த ஒரு நபர் ஆகியோர்களை ஆம்புலன்ஸ் மூலம் சேலத்திலுள்ள பிரீத்தம் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள்,. அங்குவந்த போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தார்கள். கையெழுத்து கேட்டார்கள். விபத்தில் கையில் அடிப்பட்டதால் நான் இடது கைரேகை வைத்தேன்.

5. சேலம் பிரீத்தம் மருத்துவமனையில் 42 நாட்கள் சிகிச்சையில் இருந்த எனது கணவரை சேலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் சேர்த்தோம். அடுத்த நாள் சிகிச்சை பலனின்றி சேலம் அரசு மருத்துவமனையில் இறந்துவிட்டார். எதிரியுடன் பயணம் செய்த நபரும் இறந்துவிட்டதாக சொன்னார்கள். விபத்தை ஏற்படுத்திய எதிரியை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்லமுடியும். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தியவர். விபத்திற்கு எதிரி கவனக்குறைவும், வேகமும் தான் காரணம். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கைரேகை என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். **புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 144/2025**

**Prosecution witness : அ.சா. 2** **Date : 18.09.2025.**

| | |
|---|---|
| **Name : பிரசாந்த்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடையில் குடியிருந்து வருகிறேன். நான் மில்லில் வேலை செய்கிறேன். 07.08.2024 ம் தேதி வேலைக்கு சென்றுவிட்டு வீட்டிற்கு வருவதற்காக TN 54 A 2809 XL இருச்சக்கர வாகனத்தில் மாலை 05.30 மணியளவில் ஜலகண்டாபுரத்திலிருந்து தாரமங்கலம் ரோட்டில் தாரமங்கலம் நோக்கி மேற்கிலிருந்து கிழக்காக செலவடை ஆவின் பேக்கரி அருகே சென்றபோது அதே ரோட்டில் எனக்கு பின்பாக பல்சர் 1240 இருச்சக்கரவாகனத்தில் பின்னால் ஒருவரை உட்கார வைத்துக்கொண்டு வேகமாக ஓட்டிவந்து எனக்கு பின்னால் TVS XL ஐ ஓட்டிவந்த நபர்களின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டு நிற்காமல் நான் ஓட்டிசென்ற இருச்சக்கரவாகனத்தின் மீது மோதிவிபத்தை ஏற்படுத்தினார்.

2. எனக்கு பின்னால் இருச்சக்கர வாகனத்தை ஓட்டிவந்தவருக்கு பின்னால் ஒரு பெண்மணி இருந்தார். அவர்கள் இருவருக்கும் அடிப்பட்டது. விபத்து ஏற்படுத்திய எதிரியின் வாகனத்தில் பின்னால் அமர்ந்து வந்தவருக்கும் பலத்த அடிப்பட்டது. எனக்கு வலதுப்பக்க அல்லையில் பலத்த அடிப்பட்டதால் ஆப்ரேஷன் செய்துள்ளேன். நான் அடிப்பட்டவுடன் ஜலகண்டாபுரத்திலுள்ள

அரசு மருத்துவமனைக்கு சென்று அங்கிருந்து சேலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன். எதிரி ஏற்படுத்திய விபத்தில் எனக்கு பின்னால் TVS வண்டியில் வந்த ஒருவரும், எதிரியின் வண்டியின் பின்னால் அமர்ந்து வந்த ஒருவரும் இறந்துவிட்டதாக கேள்விப்பட்டேன் இந்த விபத்திற்கு காரணம் எதிரியின் கவனக்குறைவும், அஜாக்கிரதையும் ஆகும். ஆஜர் எதிரிதான் விபத்தை ஏற்படுத்தியவர். போலீசார் என்னை விசாரித்தனர்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.</u>**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 144/2025**

**Prosecution witness : அ.சா. 3** **Date : 18.09.2025.**

| **Name : அம்மாசி** | **Caste :** |
|---|---|
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் செலவடையில் குடியிருந்து ஆவினில் வேலை செய்து வருகிறேன். கடந்த ஒரு ஆண்டுகளுக்கு முன்னால் செலவடையிலுள்ள ஆவின் பேக்கரியில் வெளியில் வேலை செய்துக்கொண்டிருந்தபோது ஜலகண்டாபுரத்திஹலருந்து தாரமங்கலம் செல்லும் சாலையில் எங்கள் கடை அருகே இருச்சக்கர வாகனத்தில் சென்றுக்கொண்டிருந்தவர் மீது பின்னால் வந்த இருச்சக்கரவாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. நான் கடையில் இருந்தேன். இருச்சக்கர வாகனத்தை ஓட்டிய நபரை விபத்து சமயத்தில் பார்த்தேன். தற்போது நினைவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை–இல்லை.**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**

**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 144/2025**

**Prosecution witness : அ.சா.4** **Date : 18.09.2025.**

| | |
|---|---|
| **Name : வேல்முருகன்** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused present.)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டடப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் வெண்ணாணம்பட்டியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. விபத்திற்கு யார் காரணம் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை–**

2) எதிரி ஓட்டிசென்ற பைக்கில் பயணம் செய்து இறந்துபோன சத்தியமூர்த்தி எனக்கு உறவினர் என்றால் சரிதான். எதிரி அவர் ஓட்டிசென்ற வாகனத்தை வேகமாக ஓட்டிசென்று இரண்டு வாகனங்கள் மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்று தெரிந்துக்கொண்டேன் என்றால் சரிதான். இந்த விபத்தில் 2 நபர்கள் இறந்துவிட்டதாக எனக்கு தெரியும். தற்போது குறுக்குவிசாரணையில் சொல்லியவாறு தான் போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு காரணம் எதிரிதான் என்றால் சரிதான்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

ஒம்/– தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.